1990 மே 11]

தற்கு, 500 பேர், நாள் ஒன்றுக்குவருவதாகத் தகவல் இருக்கிறது. ஆகவே நம்முடைய திரு. சின்னசாமி அவர்களுடைய ஆர்வத்தை மதித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தெப்பக்குளம் தூர் எடுத்து சுற்றுச் சுவர் கட்டுதல்.

*3113—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராசபாளையம் தொகுதி தேவதானம் நச்சாடை தவிர்த் தருளிய பெருமாள் கோவிலில் உள்ள தெப்பக்குளம் தூர் எடுத்து சுற்றுச் சுவர் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய பெருமாள் கோயிலில் திருப்பணிக்குழு ஒன்றினை அமைத்து முதற் பணியாக தெப்பக் குளத்தினைத்தூர் எடுத்து சுத்தம் செய்யும் பணியும், சுற்றுச் சுவர் கட்டிடும் பணியும் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

9-20 மணி

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையம் தொகுதியிலுள்ள தேவஸ்தானம் கிராமத்திலுள்ள நச்சாடை தவிர்த்தருளிய பெருமாள் கோவில் புராதன சிறப்புடைய பிரசித்திப் பெற்ற கோவில். அந்த கோவிலிலுள்ள தெப்பக்குளம் சுற்றுச் சுவர் இடிந்து தூர் வா ராமல் இருந்ததை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அமைச்சர் அவர்களும் அந்த ஏற்பாட்டைச் செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அது எப்பொழுது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதற்காக ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்படவிருக்கிறது. மிக விரைவிலே இந்தக் குழுவினை அமைத்து இந்தப் பணியினையும் அறநிலையத் துறை எடுத்துக்கொள்ளும்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணிக் குழுவில் இப்பொழுது நியமிக்க இருக்கின்ற பரம்பரை அறங்காவலர் குழுவினரைத் தவிர மற்ற வர்கள் அதிலே இடம் பெற வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நிர்வாகத்தைப் பொறுத்தமட்டிலேதான் சில கோவில்களிலே பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்றார்கள். பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்ற கோவில்களிலே திருப்பணிக் குழுவிற்கு வேறு யாரையும் நியமிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இல்லை. ஆகவே அந்த பரம்பரை அறங்காவலர்களைத் தவிர்த்து அங்கே இருக்கக்கூடிய இந்தத்திருப்பணியிலேஆர்வம் காட்டக் கூடிய அனைவரையும் நாம் அங்கே திருப்பணிக் குழுவிலே நியமிக்கலாம்.

பாதி விலையில் அத்தியாவசியப் பொருட்கள்.

*5100—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறையினருக்குப் பாதி விலையில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுவது போன்று வனக் காவலர்களுக்கும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு காவல் துறையினருக்குப் பாதி விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது போல் சிறைத் துறை அலுவலர்களுக்கும் வழங்கியுள்ளார்கள். அதைப்போன்று வனத் துறை அலுவலர்களுக்கும் பாதி விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குகின்ற வகையில் திட்டத்தை இந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதுவரை எந்த வன அலுவலர்கள் சங்கமும் எழுப்பாத ஒரு கோரிக்கையை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஏன் எழுப்புகின்றார் என்று புரியவில்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதி விலையில் அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்பதற்குக் காரணமே பல் நெடுங் காலமாக விலைவாசி ஏறி வருவதுதான். இந்த ஏற்றத்தை கருத்திற் கொண்டு, 'ரிஸ்க் அலவன்ஸ்', வீட்டு வாடகைப் படி, அதே போன்று பயணப்படியை உயர்த்துவதற்காக வனத்